# போர்த்துக்கேயர் வருகைதந்த காலப்பகுதியில் யாழ்ப்பாண அரசர்களுக்கும் தென்னிலங்கை அரசுகளுக்கும் இடையே காணப்பட்ட அரசியல் உறவுகள் ஓர் வரலாற்று நோக்கு

**க.ஜெயதீஸ்வரன்**
வரலாற்றுத்துறை, பேராதனைப்பல்கலைக்கழகம்
jeyathe@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:** போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி பதித்த சமயம் வடபகுதியில் யாழ்ப்பாண அரசும் அதற்குத் தென்பகுதியில் கோட்டை மற்றும் கண்டி அரசுகள் ஆகியவை காணப்பட்டன. பிற்பட்ட காலத்தில் கோட்டை அரசின் ஆட்சிப்பகுதியிலிருந்து சீதாவாக்கை அரசும் தோற்றம்பெற்றிருந்தது. இவற்றுள் யாழ்ப்பாண அரசானது மொழியால் தமிழ் அரசாகவும் மதத்தால் இந்து அரசாகவும் காணப்பட்டது. எனினும் இவ்வரசு போர்த்துக்கேயர் வருகை தந்த காலம் மட்டுமன்றி அதற்கு முன்பிருந்தே தென்பகுதியிலிருந்த சிங்கள பௌத்த அரசுகளுடன் அரசியல் உறவுகளைப் பேணியிருந்தது. இதன் தொடர்ச்சியாகவே போர்த்துக்கேயர் காலத்திலும் அவ்வுறவைத் தொடர்ந்து பேணிவந்தது. இந்தவகையில் இவர்களிடையே இக்காலத்தில் பேணப்பட்ட அரசியல் உறவானது சாதாரணமான இருபகுதிக்குமிடையிலான அரசியல் உறவாகவும் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படும்வகையில் பேணப்பட்டுவந்த அரசியல் உறவாகவும் காணப்பட்டது. இவ்இரு பகுதிக்கும் இடையே காணப்பட்ட அரசியல் உறவானது போர்த்துக்கேயர் வருகைதந்த சமயம் யாழ்ப்பாண அரசின் ஆட்சியாளனாக இருந்த பரராசசேகரன் காலம் முதல் இறுதி அட்சியாளனாக விளங்கிய சங்கிலி குமாரன் காலம்வரையும் நிலவியிருந்தது. இவ்வாறு இருபகுதியிடையேயும் இக் காலத்தில் பேணப்பட்ட அரசியல் உறவானது இன மத பேதங்களைக் கடந்த அரசியல் உறவாக விளங்கியிருந்ததால் முக்கியம்வாய்ந்த அரசியல் உறவாகப் பார்க்கப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்: அரசு, படையெடுப்பு, ஆதிக்கம்**

## ஆய்வு அறிமுகம்:

இலங்கை வரலாற்றில் போர்த்துக்கேயர்களது வருகை புதியதோர் காலகட்டத்தின் தொடக்கமாகவே பார்க்கப்படுகின்றது. இதற்குக் காரணம் இவர்களுடைய வருகையைத் தொடர்ந்து இப்பகுதியில் புதியதோர் பண்பாட்டு அம்சமான மேலைத்தேய கலை மற்றும் கலாசார அம்சங்கள் அறிமுகமாகி அதனூடாக இலங்கை நவீனகாலத்திற்குள் காலடி பதித்தமையாகும். இவ்வாறான சிறப்பைப் பெற்றுக் கொண்ட போர்த்துக்கேயர் கி.பி 1505 ஆம் ஆண்டில் இலங்கையில் காலடி பதித்தி சமயம் இலங்கையானது கோட்டை, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் என மூன்று இராச்சியங்களாகப் பிளவுபட்டுக் காணப்பட்டது. இவ்வாறு காணப்பட்ட அரசுகளுள் யாழ்ப்பாண அரசானது வடபகுதியை மையப்படுத்தி காணப்பட்டதுடன் வலிமைவாய்ந்த அரசாகவும் காணப்பட்டது. இதேவேளை தென்பகுதியில் கோட்டையும் மத்திய மலைநாட்டில் கண்டி அரசும் காணப்பட்டதுடன் அவற்றிடையே ஆதிக்கப்போட்டியும் நிலவி வந்தன. இவ்வரசுகளில் யாழ்ப்பாண அரசானது ஆரம்பகாலம் முதலே தென்பகுதிச் சிங்கள அரசுகளுடன் அரசியல் உறவைப் பேணிவந்துள்ளது. இது சில சமயம் அரசியல் மேலாதிக்கத்தை நிலைநாட்டும் வகையில் முரண்பாடான அரசியல் உறவாகவும், சிலசமயம் பரஸ்பர அரசியல் உதவியை அடிப்படையாகக் கொண்ட சுமூகமான அரசியல் உறவாகவும் காணப்பட்டது. இவ்வாறு நிலவிவந்த அரசியல் உறவுகளின் தொடர்ச்சியாக போர்த்துக்கேயர் காலத்திலும் இருபகுதி அரசுகளிடையேயும் அரசியல் உறவு நீடித்திருந்தது. போர்த்துக்கேயர் வருகைதந்த சமயம் இருபகுதி அரசுகளிடையேயும் சாதாரணமான அரசியல் உறவு என்ற அடிப்படையில் ஒரு வகையாகவும், போர்த்துக்கேயரது வருகை காலப்போக்கில் அரசுகளுக்கு அச்சுறுத்தலாக அமைந்ததனால் அதிலிருந்து அரசுகளைப் பாதுகாக்கும் நோக்கில் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படும்வகையில் பேணப்பட்ட அரசியல் உறவு

ஒருவகையாகவும் காணப்பட்டது. இவ்வாறு இக்காலப்பகுதியில் இருபகுதி அரசுகளிடையேயும் காணப்பட்ட அரசியல் உறவானது இன மற்றும் மத பேதங்களற்று அரசியல்ரீதியான உறாவாக மட்டுமே காணப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுமுறையியல்**

வரலாற்று அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இவ் ஆய்வில் முதலாம் தரத் தரவுகளாக யாழ்ப்பாண இராச்சியம் தொடர்பாக குறிப்பிடும் மூல நூல்கள், போர்த்துக்கேயர் காலத்தில் வருகைதந்திருந்த மதகுருமார்கள் எழுதியகுறிப்புக்கள், கடிதங்கள், நூல்கள், லிஸ்பன் சென்று யாழ்ப்பாணந் தொடர்பான சான்றுகளை சேகரித்து எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள், போர்த்துக்கேயர் காலநினைவுச் சின்னங்கள் அழிபாடுகள் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் தரத் தரவுகளாக போர்த்துக்கேயர் காலம் தொடர்பாக பிற்பட்ட காலத்தில் வெளியிடப்பட்ட நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இத்துறையில் ஈடுபாடு கொண்ட அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் போன்றவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**போர்த்துக்கேயர் வருகையும் கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகியவற்றுடனான தொடர்பும்**

ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாக வளர்ந்து வந்த அறிவியல் துறைகளைப் பயன்படுத்தி எழுச்சிபெற்ற சில அரசுகள் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டு பல நாடுகளை தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கும் முயற்சியில் ஈடுபட்டு வந்தன. இத்தகைய முயற்சியில் ஈடுபட்ட ஆட்சியாளர்களில் ஒருவரான போர்த்துக்கேயர் கி.பி 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கீழைத்தேய நாடுகள் மீது தமது கவனத்தை செலுத்தத் தொடங்கினர்(Perara.S.G,1948,P.125). இதன் விளைவு அந்நாடுகளது ஒட்டுமொத்த வரலாற்றிலும் பெரும் திருப்புமுனை ஏற்படத்தொடங்கியது. தமது கீழைத்தேய நடவடிக்கைகளுக்கான தலைமையகமாக கோவாவினை கொண்டிருந்த அவர்கள் எதிர்பாராதவிதமாகவே கி.பி 1505 ஆம் ஆண்டு இலங்கையில் காலடிபதித்தனர்(சிற்றம்பலம்.சி.க,1992.ப66-79).

போர்த்துக்கேயர் இலங்கையில் காலடிபதித்த காலிப் பிரதேசம் கோட்டை அரசிற்குச் சொந்தமாகக் காணப்பட்டதனால் அவர்களது முதற் தொடர்பு கோட்டை அரசுடனேயே ஏற்பட்டது. இக் காலத்தில் கோட்டை அரசின் ஆட்சியாளனாகக் காணப்பட்டவன் 8 ஆம் வீர பராக்கிரமபாகு (1484-1509) ஆவான். இவன்காலத்தில் ஏற்பட்ட போர்த்துக்கேயரது தொடர்பு அவன் மகன் 6ஆம் விஜயபாகு (1509-1521) காலத்தில் மேலும் அதிகரித்தது(குணராசா.க,2008,ப.243). இதன் பின்பே ஏனைய அரசுகளான கண்டி மற்றும் யாழ்ப்பாண அரசுகளுடன் அவர்களது தொடர்பு ஏற்பட்டது. கண்டி அரசைப் பொறுத்தவரை இவர்களது வருகை இடம்பெற்ற சமயம் அதன் ஆட்சியாளனாக சேனாசம்மத விக்கிரமபாகு (1469-1511) விளங்கியிருந்தான். இவனது காலத்தில் ஏற்பட்ட போர்த்துக்கேயரது தொடர்பு அவன் மகன் ஜயவீர பண்டார (1511-1551) என்பவனது காலம் முதல் மேலும் அதிகரித்தது(கிருஸ்ணராசா.செ,2005,ப.91). யாழ்ப்பாண அரசைப் பொறுத்தவரை போர்த்துக்கேயரது வருகை இடம்பெற்ற சமயம் அதன் ஆட்சியாளனாக பரராசசேகரன் (1478-1517) விளங்கினான் (குணராசா.க,ப.ப260-261). எனினும் போர்த்துக்கேயரது தொடர்பு அவன் மகன் சங்கிலி செகராசசேகரன் (1543-1568) காலம் முதல் ஏற்படத்தொடங்கியது(கிருஸ்ணகுமார்.சோ, 1992, ப.68). இவ்வாறு காணப்பட்ட இம் மூன்று அரசுகள் மீதும் போர்த்துக்கேயரது தொடர்பு ஏற்பட மூலகாரணமாய் அமைந்தது அப்பகுதியில் காணப்பட்ட பொருளாதார வளங்களாகும். அவற்றை அடையும் பொருட்டு அவ் வரசுகளுடன் தொடர்பை ஏற்படுத்திய அவர்களுக்கு அவ்வரசுகளே அதற்கான வழியையும் ஏற்படுத்திக் கொடுத்திருந்தன. அதாவது இம் மூன்று அரசுகளுக்கும் இடையே வலிமையான அரசியல் ஒற்றுமைத்தன்மை ஒன்று நிலவாதிருந்ததுடன் அவ் அரசுகளுக்குள் அரசியல் உரிமைகள்

சம்மந்தமாக போட்டிகளும் நிலவியிருந்தன. இதனால் ஒவ்வொரு அரசுகளும் பலவீனமடைந்து காணப்பட்டன.

யாழ்ப்பாண அரசைப் பொறுத்தவரை சங்கிலிப் பரராசசேகரனின் பின் ஆட்சியுரிமை தொடர்பாக அவனுடைய புதல்வர்களிடையே போட்டி நிலவி வந்தது. இதன்போது அரசைப் பெற நினைத்தவர் மற்றும் அவர்களிடமிருந்து அரசைப் பாதுகாக்க நினைப்பவர் போர்த்துக்கேயரது உதவியை நாடும் நிலைக்குச் சென்றனர். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசில் தலையிடும் உரிமையைப் பெற்றதுடன் அதனூடாக தமது ஆதிக்கத்தை அப்பகுதியில் ஏற்படுத்திக் கொண்டனர். இதுபோலவே கோட்டை அரசிலும் நிலமை இருந்தது. கோட்டை அரசைப் பொறுத்தவரை 8 ஆம் வீர பராக்கிரமபாகுவின் பின் ஆட்சி உரிமை தொடர்பாக அவன் புதல்வர்களான தர்மபராக்கிரமபாகு, விஜயபாகு ஆகியோரிடையே போட்டி நிலவிவந்த சமயம் போர்த்துக்கேயர் அவ்விடயத்தில் தலையிடும் உரிமையைப் பெற்றுக் கொண்டனர். இந்நிலமை விஜயபாகுவின் புதல்வர்களிடையே ஆட்சி உரிமை தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டதைத் தொடர்ந்து மேலும் அதிகரித்தது. இதேவேளை கண்டி அரசில் விக்கிரமபாகுவின் ஆட்சி நிலவிய சமயம் சீதாவாக்கை ஆட்சியாளனான மாயாதுன்னை அவ்வரசை கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டதனால் கண்டி அரசன் விக்கிரமபாகு அவனுக்கு எதிராக நடப்பதற்கு போர்த்துக்கேயர் உதவியை நாடினான் (கிருஸ்ணராசா.செ,2005, ப,101) . இதன் மூலமாக கண்டி அரசின் மீது தலையிடும் உரிமையையும் பெற்றுக் கொண்டனர். இவ்வாறாக பலவீனமடைந்து காணப்பட்ட இம் மூன்று அரசுகள் மீதும் தலையிடும் உரிமையைப் பெற்றுக் கொண்ட போர்த்துக்கேயர் காலப்போக்கில் கண்டி அரசு தவிர்ந்த ஏனைய இரு அரசுகளையும் கைப்பற்றிக் கொண்டனர். இந்தவகையில் கோட்டை அரசை 1597 ஆம் ஆண்டிலும் யாழ்ப்பாண அரசை 1619 ஆம் ஆண்டிலும் கைப்பற்றி அப்பகுதிகளில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டனர். கண்டி அரசைக் கைப்பற்ற பலமுறை முயன்றும் அது இறுதிவரை முடியாத காரியமாகவே அவர்களுக்கு இருந்தது.

**போர்த்துக்கேயர் காலத்தில் யாழ்ப்பாண அரசிற்கும் தென்னிலங்கை அரசுகளுக்கும் இடையே காணப்பட்ட அரசியல் உறவுகள்**

போர்த்துக்கேயரது தொடர்பு இலங்கையில் ஏற்பட்டது முதல் அவர்களால் கி.பி 1619 ஆம் ஆண்டு யாழ்ப்பாண அரசு கைப்பற்றப்படும்வரை இக்காலத்தில் காணப்பட்ட தென்பகுதி அரசுகளான கோட்டை, கண்டி மற்றும் கோட்டை அரசிலிருந்து உதயமாகிய சீதாவக்கை அரசு ஆகியவற்றுடன் அரசியல் உறவைப் பேணியிருந்தன. இவ் உறவுகள் இருவகையாகக் காணப்படுகின்றன. அவை சில சமயங்களில் சாதாரணமான அரசியல் உறவாகவும் சில சமயங்களில் போர்த்துக்கேயரது ஆதிக்கத்தை இலங்கையிலிருந்து அல்லது தத்தமது அரசுகளில் இருந்து நீக்கும் நோக்குடன் பேணிய அரசியல் உறவாகவும் காணப்படுகின்றன. இவற்றுள் போர்த்துக்கேயருக்கு எதிராக செயற்படும் பொருட்டுப் பேணிய அரசியல் உறவானது வெற்றியளிக்காததாகவே முடிவடைந்தது. இதற்குக் காரணம் ஒரு சில ஆட்சியாளர்களது சுயநலமான நடவடிக்கைகள், போர்த்துக்கேயரது சலுகைகளுக்கு உடன்பட்டுச் செயற்பட்டமை போன்றன அவற்றைப் பலவீனப்படுத்தி போர்த்துக்கேயருக்கு வெற்றியை வழங்கியிருந்தன. இப்பின்னணியிலேயே யாழ்ப்பாணம் மற்றும் கோட்டை ஆகிய அரசுகள் கைப்பற்றப்பட்டன. எவ்வாறெனினும் யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியடையும்வரை தென்னிலங்கை அரசுகளுடன் இக்காலப்பகுதியில் பேணியிருந்த அரசியல் உறவானது முக்கியமவாய்ந்த அரசியல் உறவாகவே பார்க்கப்படுகின்றது.

**யாழ்ப்பாண அரசிற்கும் தென்னிலங்கை அரசுகளுக்கும் இடையே காணப்பட்ட சாதாரணமான அரசியல் உறவுகள்.**

போர்த்துக்கேயரது தொடர்பு இலங்கையில் ஏற்பட்ட காலப்பகுதியில் யாழ்ப்பாண ஆட்சியாளனாக பரராசசேகரன் என்பவன் விளங்கினான். இவனுடைய இயற்பெயர் தொடர்பாக அறியமுடியாதுள்ளது. மயில்வாகனப் புலவர் யாழ்ப்பாண வைபவமாலையில் இவனை பரராசசேகரன் என்றே குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது யாழ்ப்பாண அரசர்களான ஆரியச்சக்கரவர்த்திகளது விருதுப்பெயர்களில் ஒன்றாகும். இப் பரராசசேகரன் யாழ்ப்பாண இராச்சியத்தில் கி.பி 1478 ஆம் ஆண்டு தொடக்கம் கி.பி 1519 ஆம் ஆண்டுவரை ஆட்சி புரிந்துள்ளான்(இராசநாயகம்.செ,2003, ப.ப,77-83). எனவே இவனுடைய ஆட்சிக் காலத்தில் போர்த்துக்கேயரது தொடர்பு இலங்கையில் ஏற்பட்டிருப்பதன் அடிப்படையில் இவன் காலம் முதல் தென்பகுதி அரசுகளான கோட்டை, சீதாவக்கை மற்றும் கண்டி ஆகிய அரசுகளுடன் அரசியல் உறவு நிலவியிருப்பதைக் காணமுடிகின்றது. இவ்வாறான உறவுநிலை யாழ்ப்பான அரசின் இறுதி ஆட்சியாளனான சங்கிலி குமாரனது காலம்வரை நிலவியிருந்தது குறிப்பிடத்தக்கது.

பரராசசேகரன் காலம் முதல் சங்கிலிகுமாரன் காலம்வரை யாழ்ப்பாண அரசிற்கும் தென்பகுதி அரசுகளுக்கும் இடையே காணப்பட்ட சாதாரணமான அரசியல் உறவு தொடர்பாக நோக்கும்போது யாழ்ப்பாண வைபவமாலை இவற்றுக்கான தகவல்களை வழங்குவதன் மூலம் காணமுடிகின்றது. இதன்படி பரராசசேகரன் காலத்தில் கண்டி மன்னனுக்கு வைத்திய உதவி புரிந்ததன் மூலம் இருபகுதியிடையேயும் சிறந்த உறவுநிலை ஒன்று நிலவியிருப்பதைக் காணமுடிகின்றது. அதாவது பரராசசேகர மன்னனுக்கு பரநிரூபசிங்கன் என்ற மகன் ஒருவன் இருந்தான். இவன் வைத்தியத்துறையில் மிகவும் தேர்ச்சி மிக்கவனாக இருந்தான். இக்காலத்தில் கண்டி அரசனுடைய மனைவிக்குத் தீராத வயிற்றுவலி ஏற்பட்டிருந்தது. இதனைத் தீர்ப்பதற்கு மன்னன் பல முயற்சிகளை மேற்கொண்டும் அதனைத் தீர்க்க முடியவில்லை. இவ் வேளையில் கண்டிமன்னன் பரநிரூபசிங்கனது திறமையைக் கேள்வியுற்று அவனது உதவியை நாடும்வகையில் பரராசசேகரனிடம் உதவி வேண்டினான். பரராசசேகரனும் அவனுக்கு உதவும் நோக்குடன் பரநிரூபசிங்கனை கண்டி அரசனிடம் அனுப்பிவைத்தான். அங்குசென்ற அவன் ஒரு மருந்தில் அரசியின் வயிற்றுவலியைக் குணமாக்கினான். அவனது திறமையைப் பாராட்டிய கண்டியரசன் அவனுக்கு பல வெகுமதிகள் வழங்கி கௌரவித்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தான் (மயில்வாகனப்புலவர், 2005, ப.ப 39-40). இவ்வாறாக கண்டி மன்னனுக்கு யாழ்ப்பாண அரசன் வைத்திய உதவி புரிந்த நிகழ்வானது இக்காலப்பகுதியில் இருபகுதியிடையேயும் காணப்பட்ட சாதாரணமான அரசியல் உறவு நிலவியிருந்ததை வெளிப்படுத்தியுள்ளது.

இரு பகுதிக்குமிடையே நிலவிய அரசியல் உறவை வெளிப்படுத்துவதாக யாழ்ப்பாண அரசிற்கும் கண்டி அரசிற்கும் இடையே காணப்பட்ட மற்றொரு அரசியல் உறவு காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அதாவது இக்காலத்தில் யாழ்ப்பாண அரசனாக புவிராஜபண்டாரம் என்பவன் விளங்கினான். இக் காலத்தில் தென்னிலங்கை அரசில் சீதாவக்கை அரசிற்கும் கண்டி அரசிற்கும் இடையே அரசியல் மேலாதிக்கப்போட்டி நிலவி வந்தது. குறிப்பாக சீதாவக்கை ஆட்சியாளனான மாயாதுன்னை தனது ஆதிக்கத்தை கண்டியில் ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுவந்தான். இந்நிலை அவனது மகனான 1ஆம் இராஜசிங்கன் காலத்திலும் தொடர்ந்து வந்தது. இக் காலத்தில் கண்டியின் ஆடசியாளனாக களுளியரட்ட பண்டாரன் விளங்கினான். இவனுடைய காலத்தில் 1ஆம் இராஜசிங்கனால் கண்டி மீதான படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டு கண்டி கைப்பற்றப்பட்டது. அங்கிருந்து தனது குடும்பத்துடன் தப்பிய

களுலியரட்ட பண்டாரன் திருகோணமலையில் தஞ்சமடைந்திருந்தான். அங்கிருந்த காலத்தில் மன்னனும் அவன் மனைவியும் அம்மை நோயினால் பாதிக்கப்பட்டு இறந்தனர். இறக்கும் தறுவாயில் மன்னன் தனது சிறுவயது மகளான குசுமாசன தேவியை தனது மருமகன் முறையான யமசிங்க பண்டாரத்திடம் ஒப்படைத்து அவளைப் பாதுகாக்கும்படியும் வயதுவந்த பின் அவளை மணக்கும் படியும் கோரினான். மன்னனது வேண்டுகோளையேற்ற யமசிங்க பண்டாரன் அவளைப் பாதுகாக்கும் பொருட்டு யாழ்ப்பாண இராச்சியம் சென்று யாழ்ப்பாண மன்னனது உதவியை நாடினான். யாழ்ப்பாண மன்னனும் அவனுக்கு உதவிபுரிய முன்வந்ததால் அவளை புவிராஜபண்டாரத்திடம் ஒப்படைத்துவிட்டு போர்த்துக்கேயரது உதவியைப் பெறும் நோக்குடன் கோவாவுக்குப் பயணமானான். யாழ்ப்பாண அரசின் பாதுகாப்பின்கீழ் இருந்த குசுமாசனதேவி பின்னர் மன்னாரில் இருந்த போர்த்துக்கேயரிடம் ஒப்படைக்கப்பட்டாள். இவள் போர்த்துக்கேயரால் மதமாற்றம் செய்யப்பட்டு டோனா கதறினா என அழைக்கப்பட்டுவந்தாள். இவள் பின்னர் போர்த்துக்கேயரால் கண்டிக்கு அழைத்துச்செல்லப்பட்டு அரசில் அமர்த்தப்பட்டாள்(இராசநாயகம்.செ,2003,ப.ப,110-111). இந்தவகையில் கண்டி ஆட்சியாளனான களுலியரட்ட பண்டாரனின் மகள் குசுமாசனதேவி யாழ்ப்பாண அரசில் பாதுகாப்பின் பொருட்டு தஞ்சமடைந்திருந்து கண்டி அரசைப் பெற்றுக்கொண்ட நிகழ்வானது யாழ்ப்பாண அரசன் கண்டி அரசுடன் அரசியல் உறவைப் பேணியிருந்ததை வெளிப்படுத்துவதாக உள்ளது. இது இக்காலத்தில் இருபகுதியிடையேயும் காணப்பட்ட சாதாரணமான அரசியல் உறவாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இரு பகுதிக்குமிடையில் இக்காலத்தில் சாதாரணமான அரசியல் உறவு ஒன்று நிலவியிருந்ததை எடுத்துக்காட்டுவதாக யாழ்ப்பாண அரசிற்கும் கண்டி அரசிற்கும் இடையில் நிகழ்ந்த திருமண உறவைக் குறிப்பிடலாம். இந்தவகையில் இக்காலத்தில் கண்டியின் ஆட்சியாளனாக இருந்த செனறத் யாழ்ப்பாண அரசுடன் திருமண உறவை மேற்கொள்ள ஆர்வம்காட்டி வந்தான். இப்பின்னணியில் இவன் தன்னுடைய மகன்களுக்கு யாழ்ப்பாண அரசகுமாரிகளை மணம்முடித்து வைப்பதற்கு முயன்றுவந்தான். இக்காலத்தில் யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயர் வசமாகக் காணப்பட்டாலும் யாழ்ப்பாண அரசகுமாரிகள் அங்கு வாழ்ந்துவந்தனர். எனவே அவர்களை மணம்முடித்து வைப்பதற்கு போர்த்துக்கேயரது உதவியையும் நாடினான். அந்தவகையில் அவனது ஒரு மகனான குமாரசிங்க என்பவனுக்கு புவிராசபண்டாரத்தின் மகளான கத்தறினா என்பவளை மணம்முடிக்க முயன்றுவந்தான். அதற்காக போர்த்துக்கேயருக்கு 40000 பதக்கு வழங்குவதாகவும் கத்தோலிக்க மதகுரு ஒருவர்மூலம் தூது அனுப்பினான். போர்த்துக்கேயர் அவனது கோரிக்கைக்கு மறுப்புத் தெரிவித்திருந்தனர். இதற்குக் காரணம் இம் மண உறவின் மூலம் செனறத் யாழ்ப்பாண இராச்சியத்தின்மீது உரிமைபெற்றுவிடுவான் என்பதனாலாகும். தனது நோக்கத்தைக் கைவிடாத செனறத் அதன்பின்னர் தஞ்சாவூர் நாயக்கர்களை அணுகி சங்கிலிகுமாரனது கலகத்தின் காரணமாக சின்னமீகமப்பிள்ளையால் பாதுகாப்பின் பொருட்டு ஒப்படைக்கப்பட்ட அரசகுமாரிகள் இருவரை தனது இரு குமாரர்களுக்கும் மணம்முடித்து வைத்தான்(இராசநாயகம். செ, 2003, ப,135). இம் மண உறவின் மூலம் யாழ்ப்பாண அரசு தனக்குரியது என்ற அடிப்படையில் 1628 ஆம் ஆண்டு மற்றும் 1629 ஆகிய ஆண்டுகளில் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றும் நோக்குடன் போர்த்துக்கேயருக்கு எதிராக படையெடுப்பை மேற்கொண்டான்(K.M.de Silva, (edt), 1995, P.156).எனினும் அப்படையெடுப்புக்கள் அவனுக்குத் தோல்வியிலேயே முடிவடைந்தன. இந்தவகையில் கண்டி மன்னன் செனறத் தனது இரு மகன்களுக்கும் யாழ்ப்பாண அரசின் அரசகுமாரிகளை மணம்முடித்துக் கொடுத்த நிகழ்வானது இருபகுதியிடையேயும் நிலவியிருந்த சாதாரணமான அரசியல் உறவை வெளிப்படுத்துவதாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக போர்த்துக்கேயர் வருகைதந்திருந்த சமயம் யாழ்ப்பாண அரசர்களுக்கும் தென்னிலங்கை அரசுகளுக்கும் இடையே வைத்திய உதவி, பாதுகாப்பின் பொருட்டு தஞ்சமடைந்தமை மற்றும் மண உறவு ஆகியவற்றின் அடிப்படையில் சாதாரணமான மற்றும் சுமூகமான அரசியல் உறவு ஒன்று நிலவியிருந்ததைக் காணமுடிகின்றது.

**போர்த்துக்கேயரது ஆதிக்கத்தை நீக்கும் நோக்குடன் யாழ்ப்பாண அரசிற்கும் தென்னிலங்கை அரசுகளுக்கும் இடையே காணப்பட்ட அரசியல் உறவுகள்**

போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி பதித்த காலம் முதலே இங்கிருந்த கோட்டை, கண்டி மற்றும் யாழ்ப்பாண அரசுகளின் ஆட்சியாளர்களும் மக்களும் அவர்களது ஆதிக்கம் இலங்கையில் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையிலேயே செயற்பட்டு வந்தனர். இதற்காக இவர்கள் தனித்தும் சிலசமயங்களில் ஒன்றினைந்தும் செயற்பட்டு வந்தனர். பிற்பட்ட காலத்தில் கோட்டை அரசின் ஒருபகுதியில் எழுச்சியடைந்த சீதாவக்கை அரசும் இவர்களுக்கெதிரான போராட்டங்களில் இணைந்து செயற்பட்டுவந்தது. இவ்வாறு தனித்தும் ஒன்றிணைந்தும் செயற்பட்டுவந்தாலும் இவர்களது போர்த்துக்கேயர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் ஒருசில ஆட்சியாளர்களதும், மக்களதும் தனிப்பட்ட சுயநலமான நடவடிக்கைகளால் பயனற்றவையாய் முடிவடைந்தன. எனினும் இவர்களது போர்த்துக்கேயருக்கு எதிராக ஒன்றிணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் முக்கியம்வாய்ந்தவையாக வரலாற்றில் இடம்பிடித்துக் கொண்டன. குறிப்பாக யாழ்ப்பாண அரசர்களும் தென்னிலங்கை அரசுகளான கோட்டை, சீதாவக்கை, கண்டி ஆகிய அரசுகளும் காலத்திற்குக் காலம் இவ்வாறான நடவடிக்கைக்காக இணைந்து செயற்பட்டமையானது முக்கியம்வாய்ந்த நிகழ்வாக அமைந்து கொண்டது. இதன் மூலமாக இருபகுதியிடையேயும் அரசியல்ரீதியான உறவுநிலை ஒன்று நிலவியிருந்ததை அறியமுடிகின்றது. இவ்வாறான அரசியல் உறவு போர்த்துக்கேயர் இலங்கையில் காலடி பதித்த காலம் முதல் யாழ்ப்பாண அரசு கி.பி 1619 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடையும்வரை நிலவியிருந்தது குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கையின் பொருட்டு இருபகுதி அரசுகளிடையேயுமான உறவுநிலையின் தொடக்கம் யாழ்ப்பாண அரசின் சங்கிலி மன்னனது காலம் முதல் ஆரம்பமாகியது. இத் தொடர்பு தென்னிலங்கை அரசுகளைப் பொறுத்தவரை கோட்டை அரசுடனேயே முதன் முதல் இடம்பெற்றது. இது தொடர்பாக நோக்கும் போது அக்காலத்தில் கோட்டை அரசின் ஆட்சியாளனாக 6ஆம் விஜயபாகு விளங்கியிருந்தான். இவன் போர்த்துக்கேயருக்கு அடங்கி நடப்பவனாகக் காணப்பட்டதனால் கோட்டை அரசில் போர்த்துக்கேயரது செல்வாக்கு அதிகரித்துக் காணப்பட்டது. இவ்வாறான நிலையை இவனது மகன்களில் ஒருவரான மாயாதுன்னை முற்றாக வெறுத்து வந்தான். இதேவேளை 6ஆம் விஜயபாகு தனக்குப்பின் கோட்டை அரசின் ஆட்சியுரிமையை தனது 2ஆம் மனைவியின் மகனுக்கு வழங்கத் திட்டமிட்டிருந்தான். இதை அறிந்த மாயாதுன்னை தந்தையிடமிருந்து அரசைப் பெறவும் போர்த்துக்கேயரை விரட்டி அரசைப் பாதுகாக்கவும் தனது உதவியாளர்களுடன் யாழ்ப்பாண இராச்சியம் சென்று சங்கிலி மன்னனிடம் உதவி நாடினான். சங்கிலி மன்னனும் போர்த்துக்கேயருக்கு எதிரான உணர்வு கொண்டவன் என்ற அடிப்படையில் அதற்கு உடன்பட்டு படை உதவிபுரிய யாழ்ப்பாண அரசின் படை மற்றும் கண்டி அரசின் படை ஆகியவற்றை சேர்த்து கோட்டை அரசிற்கு எதிராகப் படையெடுப்பை மேற்கொண்டு தந்தையைக் கொன்று அரசைக் கைப்பற்றிக் கொண்டான்(இராசநாயகம்.செ,2003, ப.96). அதன் பின் கோட்டை அரசை மூன்றாகப் பிரித்து கோட்டை அரசை தனது தமையன் புவனேகபாகுவிற்கும் றைகம பகுதியை மற்றொரு சகோதரனான றைகம பண்டாரனுக்கும் சீதாவக்கையை தானும் பெற்று

ஆட்சிபுரிந்து வந்தனர். இவ்வாறு போர்த்துக்கேயருக்கு எதிராகவும் அவர்களுக்கு அதரவாகச் செயற்பட்டுவந்த தந்தைக்கு எதிராகவும் மாயாதுன்னை சங்கிலியனிடமிருந்து படை உதவி பெற்ற நிகழ்வானது இருபகுதியிடையேயும் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படும் வகையில் பேணப்பட்ட அரசியல் உறவாகக் காணப்படுகின்றது.

சங்கிலி மன்னன் கோட்டை அரசு பிரிவடைந்த பின்பு காணப்பட்ட சீதாவக்கை அரசுடன் இணைந்து பேர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டு வந்ததைக் காணமுடிகின்றது. இக் காலத்தில் கோட்டை அரசன் புவனேகபாகு போர்த்துக்கேயருக்கு ஆதரவாகச் செயற்பட்டு வந்ததனால் ஆத்திரமடைந்த மாயாதுன்னை அவனுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கினான். இவ்வேளையில் போர்த்துக்கேயருக்கு எதிராகவும் அவர்களை ஆதரிக்கும் புவனேகபாகுவை தண்டிக்கும் நோக்குடனும் இவன் யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய அரசுகளிடம் படை உதவி கோரியிருந்தான். போர்த்துக்கேயருக்கு எதிரான உணர்வு கொண்டவனாக விளங்கிய சங்கிலியனும் அவனுக்கு உதவிபுரிய யாழ்ப்பாண அரசின் படைகளையும் கண்டி அரசின் படைகளையும் இணைத்து 1545 ஆம் ஆண்டு மற்றும் 1547 ஆம் ஆண்டுகளில் இரண்டு படையெடுப்புக்களை கோட்டை அரசு மீது மேற்கொண்டான்(கிருஸ்ணகுமார்.சோ,1992,ப,70). இதில் முதலாவது படையெடுப்பு புவனேகபாகுவால் முறியடிக்கப்பட்டது. அதன்பின் இரண்டாவது படையெடுப்பு நாயக்கர்களது படை உதவியும் பெற்று மேற்கொள்ளப்பட்டது. இப் போரின் ஆரம்பத்தில் யாழ்ப்பாண அரசின் படைகள் மூர்க்கமாகப் போரிட்டு வந்ததனால் மாயாதுன்னையின் பக்கமே வெற்றிவாய்ப்பு அதிகம் இருந்தது. இவ்வேளையில் புவனேகபாகுவின் மருமகனான வீதியபண்டாரனது மாயாதுன்னனையின் கூட்டுப்படைகளுக்கு எதிரான தாக்குதல் மற்றும் கோட்டை அரசின் படைகளுடன் போர்த்துக்கேயர் இணைந்து தாக்குதலில் ஈடுபட்டமை என்பவற்றால் களநிலமை மாற்றம் கண்டது. இதனால் மாயாதுன்னையின் கூட்டுப்படைகள் தோல்வியடைய புவனேகபாகு மீண்டும் வெற்றிபெற்றான். இவ்வாறு போர்த்துக்கேயருக்கு எதிராகவும் அவர்களை ஆதரித்த புவனேகபாகுவிற்கு எதிராகவும் இருமுறை படையெடுப்பை மேற்கொண்ட மாயாதுன்னைக்கு ஆதரவாக சங்கிலி மன்னன் படைஉதவி புரிந்த நிகழ்வானது போர்த்துக்கேயரது ஆதிக்கத்தை நீக்கும் நோக்கத்தின் அடிப்படையில் அமைந்திருப்பதானது இக்காலத்தில் யாழ்ப்பாண அரசிற்கும் சீதாவக்கை அரசிற்கும் இடையில் காணப்பட்ட அரசியல் உறவை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இக்காலத்தில் யாழ்ப்பாண அரசிற்கும் தென்னிலங்கை அரசிற்கும் இடையே அரசியல்ரீதியான உறவுநிலை ஒன்று நிலவியிருந்ததை எடுத்துக்காட்டுவதாக சங்கிலி மன்னனுக்கும் கோட்டை ஆட்சியாளன் புவனேகபாகுவிற்கும் இடையே காணப்பட்ட அரசியல்ரீதியான உறவுநிலை விளங்குகின்றது. அதாவது மாயாதுன்னை தமையனிடமிருந்து அரசைக் கைப்பற்றும் நோக்குடன் இரு முறை படையெடுத்தும் அது வெற்றியளிக்காததனால் எப்படியாயினும் கோட்டை அரசை அடையவேண்டும் என்ற அவாவின் அடிப்படையில் சுயநலத்துடன் செயற்பட்டு வந்தான். இதற்காக போர்த்துக்கேய இலங்கைக்கான தேசாதிபதிக்கு 1549 ஆம் ஆண்டு தூது அனுப்பி புவனேகபாகு தொடர்பாக குறைகூறி அவர்கள் மத்தியில் புவனேகபாகு மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தி அவனை விரோதியாக்கினான். அவர்களும் அதனை நம்பி புவனேகபாகுவிற்கு எதிராகச் செயற்படத் தொடங்கினர். போர்த்துக்கேயரின் உண்மையான நோக்கத்தை அறிந்துகொண்ட புவனேகபாகு போர்த்துக்கேயரது ஆதிக்கம் இலங்கையில் வலுவடைவதைத் தடுக்கும் நோக்குடன் ஏனைய அரசுகள்

ஒன்றினைந்து அவர்களுக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து அதன்பொருட்டு உடன்படிக்கை ஒன்றை மேற்கொள்வதற்காக தூதுவர்களை அனுப்பிவைத்தான். இவனது வேண்டுகோளை சீதாவக்கை மற்றும் கண்டி அரசுகள் நிராகரித்தன. ஆனால் யாழ்ப்பாண அரசன் சங்கிலியன் உண்மை நிலையை அறிந்து கொண்டதுடன் உடன்படிக்கைக்கு மறுப்புத் தெரிவித்தாலும் கோட்டை அரசு மீது இனிமேல் படையெடுப்பை மேற்கொள்ள மாட்டேன் என்று வாக்குறுதி வழங்கினான்(இராசநாயகம்.செ,2003,ப,97). இவ்வாறு சங்கிலி மன்னன் கோட்டை மீது படையெடுக்க மாட்டேன் என வாக்குறுதி வழங்கிய நிகழ்வானது கோட்டை அரசிற்கும் யாழ்ப்பாண அரசிற்கும் இடையே நிலவியிருந்த அரசியல் உறவை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இக்காலத்தில் இரு பகுதியிடையேயும் போர்த்துக்கேயரது மேலாதிக்கத்தை நீக்கும் வகையில் அரசியல் உறவு ஒன்று நிலவியிருந்ததை சங்கிலி மன்னனுக்கும் கோட்டை ஆட்சியாளனான புவனேகபாகுவின் மருமகனான வீதியபண்டாராவிற்கும் இடையே காணப்பட்ட அரசியல் உறவின் மூலம் அறியமுடிகின்றது. கோட்டை ஆட்சியாளனான புவனேகபாகு 1552 ஆம் ஆண்டு மரணமாக கோட்டை அரசின் ஆட்சி உரிமை அவனது மகள்வழிப் பேரனான தர்மபாலனுக்கு வழங்கப்பட்டது. ஆட்சி உரிமையைப் பெறும் கனவுடன் காணப்பட்ட வீதியபண்டாரத்திற்கு இது பெரும் ஏமாற்றமாக அமைந்தது. இதேவேளை தர்மபாலனுடைய பாதுகாவலராக போர்த்துக்கேயர் காணப்பட்டனர். இதனால் போர்த்துக்கேயருடன் முரண்பட்ட வீதியபண்டாரன் போர்த்துக்கேயருக்கெதிராகச் செயற்படத் தொடங்கினான். இதனால் போர்த்துக்கேயர் அவனைக் கைதுசெய்து சிறையில் அடைத்தனர். அங்கிருந்து தந்திரமாகத் தப்பிய வீதியபண்டாரன் சிறுபடையைச் சேர்த்து அங்கு காணப்பட்ட கத்தோலிக்க தேவாலயங்களை அழித்ததுடன் மதம்மாறிய பல கிறிஸ்தவர்களை படுகொலை செய்தும் வந்தான். போர்த்துக்கேயர் அவனை மீண்டும் கைதுசெய்ய முயன்றபோது அங்கிருந்து அரச செல்வங்கள், புத்தரது புனித சின்னங்கள் ஆகியவற்றுடன் அங்கிருந்து தப்பி சிறிதுகாலம் சீதாவாக்கையில் தங்கியிருந்தான். அவ்வேளையில் மாயாதுன்னையுடன் முரண்பட்டு அங்கிருந்து தப்பி யாழ்ப்பாண அரசிடம் தஞ்சமடைந்தான்(இராசநாயகம்.செ,2003,ப.100). போர்த்துக்கேயருக்கு எதிரான உணர்வுடன் சங்கிலியன் காணப்பட்டதனால் இருவருக்கும் இடையே உடன்பாடிக்கை ஒன்றை மேற்கொண்டு போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டு வந்தனர். போர்த்துக்கேயருக்கு எதிராகப் போரிடுவதற்காக வெடிகுண்டு தயாரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டபோது தவறுதலாக வெடிகுண்டு வெடித்ததனால் அவ்விபத்தில் வீதியபண்டாரன் மரணத்தைத் தழுவிக்கொண்டான். வீதியபண்டாரனுக்கும் சங்கிலி மன்னனுக்கும் இடையே நட்புரீதியான நல்லுறவு நிலவியதன் அடிப்படையில் வெடிவிபத்து நடைபெற்ற இடத்தில் அவன் ஞபகார்த்தமாக ஆலயம் ஒன்றை அமைத்தான். அதுவே இன்று நல்லூர்ப் பகுதியில் காணப்படும் பூதவராயர் ஆலயம் எனக் கூறப்படுகின்றது(கிருஸ்ணகுமார்.சோ,ப,71). இவ்வாறு கோட்டை அரசைச் சேர்ந்த வீதிய பண்டாரன் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படும் நோக்கில் யாழ்ப்பாண அரசில் தஞ்சமடைந்து சங்கிலிமன்னனுடன் இணைந்து செயற்பட்டு வந்தமையானது இரு பகுதியும் போர்த்துக்கேயரது ஆதிக்கத்தை நீக்கும் நோக்குடன் அரசியல் உறவைப் பேணியிருந்ததற்குச் சாண்றாக அமைகின்றது.

சங்கிலி மன்னன் காலத்தில் இரு பகுதியிடையேயும் இக்காலத்தில் அரசியல் உறவு ஒன்று நிலவியிருந்ததற்கான மற்றொரு எடுத்துக்காட்டாக மாயாதுன்னைக்கு இவன் தென்னிந்தியப்படை யாழ்ப்பாணத்தினூடாக செல்வதற்கு உதவி புரிந்த நிகழ்வு

விளங்குகின்றது. இது சங்கிலி மன்னனது இறுதிக்காலப்பகுதியில் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. சங்கிலி மன்னனும் மாயாதுன்னையும் ஆரம்பம் முதலே போர்த்துக்கேயருக்கு எதிரான உணர்வு கொண்டவர்களாக விளங்கியிருந்ததுடன் அவர்களுக்கு எதிராகவும் செயற்பட்டு வந்தனர். இவ்வாறான பின்னணியிலேயே 1564 ஆம் ஆண்டு மாயாதுன்னை போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டபோது அவனுக்கு ஆதரவாக தென்னிந்தியாவிலிருந்து வருகைதந்த வடக்கர் படையை யாழ்ப்பாணத்தினூடாக அனுப்பிவைத்தான்(கிருஸ்ணகுமார்.சோ,1992,ப.72). எனவே மாயாதுன்னைக்கு ஆதரவாக சங்கிலி மன்னன் வடக்கர் படையை அனுப்பி உதவிபுரிந்த நிகழ்வானது இருபகுதியிடையேயும் அரசியல் உறவு நிலவியிருந்ததை எடுத்துக்காட்டியுள்ளது.

போர்த்துக்கேயருக்கெதிரான உணர்வு கொண்டதன் அடிப்படையில் சங்கிலி மன்னன் அவர்களுக்கெதிராகச் செயற்படும் வகையில் தென்னிலங்கை அரசுகளுடன் காலத்திற்குக் காலம் உறவைப் பேணிவந்தான். ஆனால் அவனது ஆட்சிக்காலத்தின் பின்னர் யாழ்ப்பாண அரசில் பல்வேறு குழப்பங்கள் நிலவிவந்தன. குறிப்பாக கி.பி 1565 ஆம் ஆண்டின் பின்னர் இந்நிலமை ஏற்பட்டது. இதனால் யாழ்ப்பாண அரசர்கள் தமது அரசுரிமையைப் பெறவும், பாதுகாக்கவும் போர்த்துக்கேயரைச் சார்ந்திருக்கவேண்டிய நிலைக்கு ஆளாகினர். இதனால் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படும்நிலை அருகிச்சென்றது. எனினும் ஓரிரு ஆட்சியாளர்கள் போர்த்துக்கேயர்களுக்கு எதிராகச் செயற்படுவதற்கு தென்னிலங்கை அரசுடன் உறவைப் பேணியிருந்தனர். சங்கிலி மன்னனின் பின்னர் யாழ்ப்பாண அரசில் புவிராசபண்டாரம், காசிநயினார், பெரியபுள்ளை, எதிர்மன்னசிங்கன், சங்கிலிகுமாரன் ஆகியோர் ஆட்சிபுரிந்தனர். இவர்களுள் எதிர்மன்ன சிங்கன், சங்கிலிகுமாரன் ஆகியோர் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படும்வகையில் தென்னிலங்கை அரசுடன் உறவைப் பேணியிருந்தனர்.

எதிர்மன்னசிங்கன் போர்த்துக்கேயருக்கெதிராகச் செயற்படும்வகையில் தென்னிலங்கை அரசுடன் உறவைப்பேணியிருந்தது தொடர்பாக நோக்கும்போது இவன் அரசைப் பெறுவதற்கு போர்த்துக்கேயர் உதவிபுரிந்திருந்தனர். இதனால் ஆரம்பத்தில் அவர்களுக்கு விசுவாசமாகச் செயற்பட்டு வந்தான். எனினும் காலப்போக்கில் அவர்களுக்கு எதிராகச் செயற்பட்டுவந்தான். இவ்வேளையில் கண்டி அரசர்களுக்கு போர்த்துக்கேயருக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு உதவிபுரிந்து வந்தான். இந்தவகையில் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்பட்டுவந்த கண்டி அரசர்களான விமலதர்மசூரியன் மற்றும் செனறத் ஆகியோருக்கு தென்னிந்தியாவிலிருந்து கிடைத்துவந்த படை மற்றும் ஆயுத உதவி ஆகியவை யாழ்ப்பாணத்தினூடாக கண்டியை சென்றடைய உதவி புரிந்துவந்தான். குறிப்பாக தென்னிந்தியப் படைகள் யோகிகள் போன்று வேசமிட்டு கண்டியை சென்றடைய எதிர்மன்னசிங்கன் உதவிபுரிந்துவந்தான்(கிருஸ்ணகுமார்.சோ,1992,ப,75). எனினும் அதனை அறிந்துகொண்ட போர்த்துக்கேயர் எதிர்மன்னசிங்கன் மூலம் அவர்களைக் கைதுசெய்து மீண்டும் தென்னிந்தியாவிற்குத் திருப்பியனுப்பிவைத்தனர். இந்தவகையில் எதிர்மன்னசிங்கன் கண்டி மன்னர்களான விமலதர்மசூரியன் மற்றும் செனறத் ஆகியோருக்கு போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படுவதற்கு தென்னிந்தியப் படை உதவி கிடைப்பதற்கு உதவியமையானது இரு பகுதியிடையேயும் அரசியல்ரீதியான உறவு நிலவியிருப்பதை எடுத்துக்காட்டியுள்ளது.

எதிர்மன்னசிங்கனின் பின்னர் ஆட்சிப்பொறுப்பைப் பெற்றுக்கொண்ட சங்கிலிகுமாரன் போர்த்துக்கேயரது ஆதரவுடன் அரசைப் பெற்றுக்கொண்டதனால் அவர்களுக்கு விசுவாசமாகவே ஆரம்பத்தில் நடந்துகொண்டான். இதனால் ஆரம்பத்தில்

தென்னிலங்கை அரசுடன் எந்தவிதமான தொடர்பையும் பேணாதிருந்தான். குறிப்பாக இவனது காலத்தில் தென்னிலங்கை சிங்கள இளவரசன் ஒருவன் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படும் நோக்குடன் தஞ்சாவூர் அரசனிடம் உதவிவேண்டி யாழ்ப்பாணத்தினூடாகச் சென்றபோது சங்கிலிகுமாரன் அவனைப் போகவிடாது திருப்பியனுப்பினான். இதனால் மகிழ்ந்த போர்த்துக்கேயர் கண்டி அரசர்க்குக் கிடைத்துவந்த வடக்கர் படையையும் தடுக்க வேண்டும் எனக்கோரியிருந்தனர். இவ்வாறாக சங்கிலிகுமாரனுக்கும் போர்த்துக்கேயருக்கும் ஆரம்பத்தில் நல்லுறவு நிலவியிருந்த அதேவேளை தென்னிலங்கை அரசுடன் சிறந்த அரசியல் உறவு ஒன்று காணப்படவில்லை. ஆனால் பிற்பட்ட காலங்களில் அந்நிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. அதாவது போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படத் தொடங்கிய சங்கிலிகுமாரன் அவர்களுக்கு எதிராகச் செயற்பட்டு வந்த கண்டி மன்னர்களுடன் உறவைப் பேணத் தொடங்கினான். போர்த்துக்கேயர்களுக்கு எதிராகச் செயற்பட்டு வந்த சங்கிலிகுமாரன் அதற்காக தஞ்சாவூர் நாயக்கர்களிடமிருந்து படை உதவி பெற்றிருந்தான். இதேவேளை தஞ்சாவூர்ப் படைகள் கண்டி அரசிற்குக் கிடைக்கவும் உதவிபுரிந்து வந்தான்(இராசநாயகம்.செ,2003,ப,122). இவ்வாறான வேளையில் சங்கிலி குமாரன் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படும் வகையில் தஞ்சாவூர்ப்படைகளை யாழ்ப்பாணத்தில் வைத்திருப்பதையும் கண்டி மன்னர்களுக்கு இப்படை உதவி கிடைக்க உதவிவருவதையும் போர்த்துக்கேயர் அறிந்து கொண்டனர். இதனாலேயே சங்கிலி மன்னனை தண்டிக்கும் நோக்குடன் யாழ்ப்பாண அரசுமீது படையெடுப்பை மேற்கொண்டு கி.பி 1619 ஆம் ஆண்டு அவனைக் கைதுசெய்ததன் மூலம் யாழ்ப்பாண அரசையும் கைப்பற்றிக் கொண்டனர்(குணசிங்கம்,மு,2008,ப.172). இந்தவகையில் சங்கிலி குமாரன் இறுதிக்காலப் பகுதியில் போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படும் வகையில் கண்டி அரசனுடன் அரசியல் உறவைப் பேணியமையானது யாழ்ப்பாண அரசின் இறுதிக்காலத்திலும் இருபகுதியிடையேயும் அரசியல் உறவு நிலவியிருப்பதை வெளிப்படுத்தியிருக்கின்றது.

இவ்வாறாக போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படும் வகையில் யாழ்ப்பாண அரசும் தென்னிலங்கை அரசுகளான கோட்டை மற்றும் அதன் ஒரு பகுதியிலிருந்து தோற்றம்பெற்ற சீதாவாக்கை மற்றும் கண்டி அரசுகளுக்கிடையே பரஸ்பர படை உதவி புரியும் அரசியல் உறவு ஒன்று நிலவியிருந்தது. இவ் அரசியல் உறவு யாழ்ப்பாண அரசன் சங்கிலி காலம் முதல் அதன் இறுதி ஆட்சியாளனான சங்கிலி குமாரன் காலம்வரை நிலவியிருந்தது. இருபகுதியிடையேயும் போர்த்துக்கேயருக்கெதிராகச் செயற்படும் வகையிலான அரசியல் உறவு ஒன்று நிலவியிருந்தாலும் அது வெற்றியளிக்காத உறாவாகவே நிறைவுகண்டது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

போர்த்துக்கேயர் வருகைதந்த சமயத்தில் இலங்கையின் வட பகுதியில் யாழ்ப்பாண அரசு எழுச்சியடைந்திருந்த சமயம் தென்பகுதியில் கோட்டை அரசும் அதன் ஒரு பகுதியில் சீதாவாக்கை அரசும் மத்திய மலைநாட்டில் கண்டி அரசும் தோற்றம் பெற்றிருந்தன. இவ் அரசுகள் அரசியல்ரீதியாக பிரிவடைந்திருந்தாலும் காலத்திற்குக் காலம் தமக்குள் உறவைப் பேணிவந்தன. இந்தவகையில் போர்த்துக்கேயர் வருகைதந்த சமயம் வடபகுதியின் யாழ்ப்பாண அரசிற்கும் தென்பகுதியின் கோட்டை, சீதாவாக்கை மற்றும் கண்டி அரசுகளுக்கும் இடையே காலத்திற்குக்காலம் உறவு நிலை ஒன்று நிலவிவந்தது. இவ் உறவு அக்காலத்தில் யாழ்ப்பாண ஆட்சியாளனான பரராசசேகரன் காலம் முதல் யாழ்ப்பாண அரசு வீழ்ச்சியடையும்வரை அதன் ஆட்சியாளனாக விளங்கிய சங்கிலி குமாரன் காலம்வரை நிலவியிருந்தது. இவ்வாறு

இருபகுதியிடையே காணப்பட்ட அரசியல் உறவானது சாதாரணமான இரு பகுதி அரசுகளுக்கும் இடையான அரசியல் உறவாகவும், போர்த்துக்கேயருக்கு எதிராகச் செயற்படும் வகையிலான அரசியல் உறவாகவும் காணப்பட்டது. இவ் அரசியல் உறவானது இக்காலத்தில் இன, மத மற்றும் பிரதேச பேதங்கள் கடந்த அரசியல் உறவாக இருபகுதியிடையேயும் பேணப்பட்டு வந்ததெனக்கூறினால் அது மறுக்கமுடியாத உண்மையாகும்.

**உசாத்துணை நூல்கள்**


[1] மயில்வாகனப்புலவர். (1949) ''யாழ்ப்பாண வைபவமாலை'' (குல.சபாநாதன்(பதிப்பாசிரியர்)), திருமகள் அச்சகம், சுன்னாகம்.

[2] சுவாமி ஞானப்பிரகாசர்.(1928), ''யாழ்ப்பாண வைபவ விமர்சனம''. அச்சுவேலி, ஞானப்பிரகாச யந்திரசாலை.

[3] சிற்றம்பலம்,சி.க.(1992), ''யாழ்ப்பாண இராச்சியம்''. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகவெளியீடு,திருநெல்வேலி.

[4] குணசிங்கம்,மு. (2008),''இலங்கையில் தமிழர் ஒருமுழுமையானவரலாறு''. எம். விவெளியீடு,அவுஸ்திரேலியா.

[5] கிரு'ணராசா, (2005),செ. ''இலங்கைவரலாறுபாகம்-2''. பிறைநிலாவெளியீடு,கோண்டாவில்.

[6] கிரு'ணராசா, (2012)செ. ''இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள்''. எ.பிகிறியேசன்,கொழும்பு.

[7] குணராசா,க. மற்றும் கமலா, கு. (2008), ''இலங்கைச் சுருக்கவரலாறு''. கமலம் பதிப்பகம்,யாழ்ப்பாணம்.

[8] Pathmanathan.S, (1978), "The Kingdom of Jaffna". Ceylon news paper Ltd, Colombo.

[9] K.M.de Silva, (edt), (1995), "History of Sri Lanka", Volume II, T.B.H.Abeyasinghe, The Kingdom of Kandy: Foundations and foreign relations to 1638, Sridevi Printers, Dehiwala.

[10] Abeyasingi, Tikiri. (1986),"Jaffna under the Portuguese". Lake house investments Ltd, Colombo.

[11] Gueyroz, Fernao De.(1930), "The temporal and spiritual conquest of Ceylon". Translated by Fr.S.G.Perara, Colombo.

[12] Tikiri Abeyasinghe, (1966), "Portuguese rule in Ceylon", Lake house, Colombo.

[13] Silva, Chandra Richard. "The Portuguese in Ceylon". H.w.cave& company, colombo. P, 1972.

[14] Pieris, P.E. "Ceylon and the Portuguese". Sri satguru publication, Delhi. ".02, 1970


.